LEMBAGA PEPERIKSAAN
KEMENTERIAN PELAJARAN MALAYSIA

# SIJIL PELAJARAN MALAYSIA 2010 — 6354/1

**BAHASA TAMIL**
**Kertas 1**
**Nov./Dis.**

$1\frac{3}{4}$ jam — **Satu jam empat puluh lima minit**

**JANGAN BUKA KERTAS SOALAN INI SEHINGGA DIBERITAHU**

1. *Kertas soalan ini mengandungi dua bahagian:* **Bahagian A** *dan* **Bahagian B**.
2. *Jawab* **satu** *soalan daripada* **Bahagian A** *dan* **satu** *soalan daripada* **Bahagian B**.
3. *Jawapan anda hendaklah ditulis pada buku jawapan yang disediakan. Sekiranya buku jawapan tidak mencukupi, sila dapatkan helaian tambahan daripada pengawas peperiksaan.*

Kertas soalan ini mengandungi 5 halaman bercetak dan 3 halaman tidak bercetak.

[Lihat halaman sebelah



6354/1 © 2010 Hak Cipta Kerajaan Malaysia

**பொதுக்கட்டளை:**

இக்கேள்வித்தாள், **பிரிவு அ** மற்றும் **பிரிவு ஆ** என்னும் இரண்டு பிரிவுகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒரு கேள்வியாக **இரண்டு** கேள்விகளுக்கு விடையளிக்கப்பட வேண்டும்.

**பிரிவு அ : திறந்தமுடிவுக் கட்டுரை**

[70 புள்ளிகள்]

*[பரிந்துரைக்கப்படும் நேரம் : 1 மணி 15 நிமிடம்]*

கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளுள் **ஏதேனும் ஒன்றனைப்** பற்றி **250 சொற்களுக்குக் குறையாமல்** ஓர் எழுத்துப்படிவத்தை எழுதுக.

1 அழகு.

2 தண்டனைகளைக் கடுமையாக அமலாக்கம் செய்வதன் வாயிலாக **மட்டுமே** நாட்டில் கட்டொழுங்குமிக்க வாகனமோட்டிகளை உருவாக்க இயலும்.

3 குறுஞ்செய்தி சேவையின்* பயன்பாட்டால் மாணவர் வாழ்க்கையில் ஏற்படும் **விளைவுகள்**.

4 தமிழ் மொழிச் சீர்கேட்டைக்** குறைப்பதில் ஊடகங்களின் பங்கு என்னும் தலைப்பில் **உரையாற்றுக**.

5 **இனப்பற்று** என்னும் கருப்பொருளில் ஒரு சிறுகதை அல்லது நாடகம்/ஓரங்க நாடகம் எழுதுக.

* *sms / mms / போன்ற சேவைகள்*

** *pencemaran bahasa*

 © 2010 Hak Cipta Kerajaan Malaysia 

## பிரிவு ஆ : வழிகாட்டிக் கட்டுரை

[30 புள்ளிகள்]

*[பரிந்துரைக்கப்படும் நேரம் : 30 நிமிடம்]*

கொடுக்கப்பட்டுள்ள கேள்வி **1**, கேள்வி **2** ஆகியனவற்றுள் **ஒன்றனை மட்டும்** தெரிவு செய்து விடை எழுதுக.

1 விளையாட்டுத்துறையில் நம்மவர்களின் ஈடுபாட்டைக் குறித்து உம் நண்பர் ஒருவரோடு உரையாடுகின்றீர். அந்த **உரையாடலை** எழுதுக.

கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைப் பயன்படுத்தி உரையாடலைத் தயார் செய்க.

- விளையாட்டுத் துறையில் நம்மவரின் ஈடுபாடு - முந்தைய / இன்றைய நிலை
- குறைந்து அல்லது பெருகி வருவதற்கான காரணங்கள்
- விளையாட்டுத் துறையின் அவசியம் - அதனால் விளையும் நன்மைகள்
- யார் - எந்தத் தரப்பு - என்னென்ன / எவ்வாறு பங்காற்றலாம்
- மேலும் ஊக்குவிப்பதற்கான வழிமுறைகள்

**உரையாடலைத் தயாரிக்கும்போது கவனத்தில் கொள்ள வேண்டியவை:**

- கட்டாயம் உரையாடல் வடிவில் இருத்தல்
- சூழல் - அறிமுகம் - முகமன் இருத்தல்
- இருவர் பேசுவதாக அமைந்திருத்தல்
- இருவருமே கருத்துகளைப் பேசுவதாக இருத்தல்
- ஒருவர் குறைந்தது இரு முறையாவது பேசியிருத்தல்
- உரையாடலுக்குரிய குறியீடுகளையும் உணர்ச்சிகளையும் வெளிப்படுத்தியிருத்தல்
- உரையாடலுக்குரிய துறைசார்மொழியில் எழுதியிருத்தல்
- விடைபெறுதல் - முடிவு இருத்தல்

**அல்லது**

[Lihat halaman sebelah


6354/1 © 2010 Hak Cipta Kerajaan Malaysia

2 கீழ்க்காணும் கவிதையை மாற்றி அதனை **உரைநடை வடிவில்** எழுதுக.

# தமிழகமே! தமிழகமே!

1 தமிழகமே! தமிழகமே!
தரணியெல்லாம் தமிழர்களை
உமியாக்கி அனுப்பிவைத்த
உழவுநிலத் தமிழகமே!

2 யாதும் நம் ஊரென்றும்
யாவரும் நம் கேளிரென்றும்
ஓதிநீ அனுப்பியதை
உடும்பாய்ப் பிடித்தபடி
உலக மரத்தினிலே
ஒண்டுக் குடித்தனத்தைப்
பலநாளாய் நடத்துகிறார்
பாமரராய் உன்னினத்தார்

3 நாட்டில்தான் அவர் வேற்றார்
நலங்கூறும் செந்தமிழ்ப் பண்
பாட்டால் உன்னுடைய
ரத்தத்தின் ரத்தமன்றோ?

4 நிலத்தால்தான் பிரிந்தார்
நினைத்துப்பார் தமிழகமே
மொழியால் என்றும் உன்றன்
உடன்பிறப்பும் அவரலவோ?

5 வாழுகின்ற சூழ்நிலைக்கு
மாறாமல் பணியாமல்
நாளும் மொழிவதுவும்
உன்னுதரத் தமிழன்றோ?

6 "மெல்லத் தமிழணங்கு
கொல்லப் படுவள்" என்று
அல்லும் பகலுமிங்கே
அரணமைத்துக் காக்கின்ற
நல்லார் சிலரால்தான்
நானேதமிழ் பாடுகிறேன்!
அல்லவெனில் இங்கென்கை
அடுத்தமொழி யேஎழுதும்;
சொல்வதற்கே என்நா
சொற்றமிழை மறந்திருக்கும்.

 © 2010 Hak Cipta Kerajaan Malaysia 

7 கலைஞரைப் போல் தமிழர்களின்
தலைவரென விளங்குவதற்குத்
தலைவர் சிலர் ஈங்குண்டு.
தமிழகத்தின் தரமிகுந்த
கவிஞர், எழுத்தாளர்
கலைஞர்க்குச் சமமானோர்
குவிந்து கிடக்கின்றார்
குடத்துள் விளக்காக!

8 கலையால், இலக்கியத்தால்
மொழியால், பண்பாட்டால்
தலைமைக் குருவாகத்
தரணித் தமிழருக்குத்
தோன்றாத் துணையெனவே
துலங்கி வருகின்ற
சான்றோர் மிகுந்தபெருந்
தாய்மைத் தமிழகமே.

9 உலகத் தமிழர்களின்
ஒப்பற்ற திறமைகளைத்
தலைமைக் குரு நீயும்
தகுந்தபடி போற்றவில்லை!
இந்தக் குறை எங்கள்
வெள்ளைமனத் துள்ளகறை
எந்த மருந்தாலும்
நீக்கப்படாத கறை!

10 கறை நீக்கும் பணியைக்
கடுகிநீ செய்திடுக!
குறை இனியும் தொடர்ந்தால்
கேட்டுக் கொள் தமிழகமே!

– பாதாசன்

[*ஆறாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுமலர் 1987*]

**KERTAS SOALAN TAMAT**

 © 2010 Hak Cipta Kerajaan Malaysia 